5. அறிக்கைகள் அளித்தல்

பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அறிக்கைகள் அளித்தல், பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன், பொது நிறுவனங்கள் குழுத் தலைவர்.

திரு. தா. உதயசூரியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006-2007 ஆம் ஆண்டுக்கான பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்து ஒன்று முதல் முப்பத்து மூன்று வரையிலான மூன்று அறிக்கைகளை, குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

6. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 34—நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

(ஆ) கோரிக்கை எண் 42—ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

(அ) கோரிக்கை எண் 34—நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2007-2008 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீதான விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 34 - நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,926,38,61,000/-, மூலதனக் கணக்கில் ரூ.582,40,29,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.151,93,50,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.